## முதல் இடைப் பருவத் தேர்வு - 2021

## வகுப்பு 12

நேரம்: 1.30 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்: 50

### பிரிவு - I

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்:** **10×1=10**

1) அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்

அ) ஃபோயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2) மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?

அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

3) முதல் நிலைச் சந்தை .............. எனவும் அழைக்கப்படுகிறது.

அ) இரண்டாம் நிலைச் சந்தை ஆ) பணச் சந்தை

இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுகச் சந்தை

4) மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் .............. ஆவர்.

அ) தனிநபர் ஆ) நிறுமங்கள்

இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

5) பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ..............

அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

6) நாட்டில் .............. பங்குச் சந்தைகள் உள்ளன.

அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

7) மனிதவளம் என்பது ஒரு .............. சொத்து.

அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா

இ) நிலையான ஈ) நடப்பு

8) பணிமாற்றம் என்பது ஒரு .............. ஆட்சேர்ப்பு வளமாகும்.

அ) அகவள ஆ) புறவள

இ) புறத்திறனீட்டல் ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

9) தேர்வு பொதுவாக ஒரு .............. செயலாக கருதப்படுகிறது.

அ) நேர்மறை ஆ) எதிர்மறை

இ) இயற்கை ஈ) இவை எதுவும் இல்லை

10) வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை .............. என்பர்.

அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு

இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

## பிரிவு - II

குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 15-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 4×2=8

11) மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.

12) உடனடிச் சந்தை என்றால் என்ன?

13) இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச் சந்தைகளை பற்றி எழுதுக.

14) மனிதவள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டு கூறுக.

15) ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?

## பிரிவு - III

குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 20-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 4×3=12

16) மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.

17) மூலதனச் சந்தையின் பல்வேறு வகைகள் யாவை? விளக்குக.

18) பணச்சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்?

19) காளை மற்றும் கரடி - விளக்குக.

20) ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன?

## பிரிவு - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 4×5=20

21) அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) மேலாண்மையின் பல்வேறு முக்கிய பணிகளை விளக்குக.

22) அ) முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

23) அ) மனிதவளத்தின் தனிப்பட்ட சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக. (ஏதேனும் 5)

24) அ) பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவரி.